# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டுத் தேர்வு
# 2015 - 2016
# தமிழ்மொழி
## வளர் தமிழ் 5

சுட்டெண்:............................................................ நேரம்: 150 மணித்துளிகள்

www.tamiledc.com

1) **பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

1. ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று ____________________ .
(நல்வழி, புறநானூறு, சிலப்பதிகாரம்)

2. ஈரூடக உயிரி ____________________ .
(மீன், முதலை, இறால்)

3. நான் விலங்ககத்தில் விலங்குகளைக் ____________________ .
(கண்டேன், கண்டோம், கண்டான்)

4. வாழை + தோட்டம் என்பது ____________________ .
(வாழைதோட்டம், வாழைத்தோட்டம், வாழைய்த்தோட்டம்)

5. ஆடற்குல ஆண்கள் எனப்படுவோர் ____________________ .
(கூத்தர், விறலியர், பாணர்)

6. இயல் இசை நாடகம் என்பன ____________________ .
(முக்கனி, முப்பால், முத்தமிழ்)

7. **பழமொழி :-**
தோள் கொடுப்பான் ____________________ .
(தோளன், தோழன், தோலன்)

8. மாமல்லன் என்று அழைக்கப்பட்ட மன்னன் ____________________ .
(அருண்மொழித்தேவன், நரசிம்மபல்லவன், எல்லாளன்)

9. நட்புப் பற்றிச் சிறப்பாகக் கூறும் நூல் ______________________ .

(திருக்குறள், சிலப்பதிகாரம், புறநானூறு)

10. நான்கு காளைகளையும் கொன்று தின்ற விலங்கு __________________ .

(கரடி, ஓநாய், சிங்கம்)

11. சிற்றுயிரிகளில் ஒன்று ______________________ .

(புலி, தேனீ, நாய்)

12. முல்லைநில மக்களை ____________________ என அழைப்பர்.

(ஆயர், குறவர், வேளாளர்)

13. விளையாட்டுப் போட்டியில் ஓடிய சிறுவன் நீரை __________________ எனக் குடித்தான்.

(மடமட, படபட, கலகல)

14. முருங்கைக்காய் என்பதைப் பிரித்து எழுதினால் ______________________ .

(முருங்கைக் + காய், முருங்கை + காய், முருங்கைய்க் + காய்)

15. **விடுகதை :-**

ஊருக்கு நடுவே உயர்ந்து நிற்கும்; உருவங்கள் பலவும் தாங்கி நிற்கும்; உச்சியில் குடம் தரித்திருக்கும். அது என்ன?

______________________ .

(கதிரவன், பனை, கோபுரம்)

16. இரை என்பது ____________________ .

(நீர், உணவு, காற்று)

17. ''இனி நான் துறவி தமிழே என் துணை'' எனக் கூறியவர்

____________________ .

(சேரன்செங்குட்டுவன், கணிகன், இளங்கோ அடிகள்)

18. தஞ்சைப்பெருங்கோவில் இராசராசசோழனால்

____________________ .

(கட்டுவிக்கப்பட்டது, கட்டப்படுகின்றது, கட்டப்படும்)

19. ________________ நட்பானது பழகப்பழக மனதுக்கு இனிமை தரும்.

(தீய, நல்ல, கூடாத)

20. இவ்வுலகில் அழியாது உயர்ந்து நிற்பது ____________________ .

(பணம், புகழ், இன்பம்)

21. தைப்பொங்கலன்று சிறந்து நிற்கும் தமிழர் பண்பாடு

____________________ .

(மானம், வீரம், விருந்தோம்பல்)

22. முல்லை நிலத்தின் நிலையான பறவை ____________________ .

(செண்பகம், கிளி, கடற்காகம்)

23. இலக்கணவினாவிடை என்ற நூலை வெளியிட்டவர்

____________________ .

(தாமோதரம்பிள்ளை, ஆறுமுகநாவலர், சோமசுந்தரப்புலவர்)

24. _______________ உனது கடமையைச் செய்.

(நீ, நான், நீங்கள்)

25. _______________ மாதத்தில் தைப்பொங்கல் கொண்டாடப்படும்.

(மாசி, சித்திரை, தை)

26. பொதுவியல் என்னும் ஆடற்கலை ஆடப்படுவது

_______________ .

(ஊர்மக்களுக்காக, வேந்தர்களுக்காக, மன்னர்களுக்காக)

27. _______________ சிறந்த ஓவியங்கள் காணப்படுகின்றன.

(சித்தன்னவாசலில், தஞ்சையில், மாமல்லபுரத்தில்)

28. தமிழர்வீரத்தோடு தொடர்புடைய மரம் _______________ .

(பாலை, வாகை, முதிரை)

29. ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்ற பாடத்திலிருந்து நாம் அறிந்து கொண்டது _______________ .

(ஒற்றுமையை, பிரிவினையை, வேற்றுமையை)

30. ''கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மை....'' என்ற பாடல் இடம் பெற்ற நூல் _______________ .

(மூதுரை, நல்வழி, நாலடியார்)

புள்ளிகள் 30

**2) கீறிட்ட இடத்தில் மிகப்பொருத்தமான சொல்லை எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| கலகல | நல்லநல்ல | திருதிரு | ஓடிஓடி | மளமள |

1. காவலரைக் கண்ட கள்வன் ____________________ என விழித்தான்.

2. அப்பா தனது வேலைகளை ____________________ என்று செய்து முடித்தார்.

3. நாம் ____________________ நூல்களைத் தேடிக் கற்போம்.

4. ஆசிரியர் கூறிய நகைச்சுவையைக் கேட்ட மாணவி ____________________ என்று சிரித்தாள்.

5. பூங்காவில் சிறுவர்கள் ____________________ விளையாடினர்.

புள்ளிகள் 10

3) **பாடநூல் வினா ஏழினுள் ஐந்திற்கு விடை தருக.**

1. நெய்தல்நில மக்களின் தொழில்கள் எவை?

______________________________

______________________________

2. ஆனைந்தின் பெயர்களைத் தருக?

______________________________

3. நண்பர்களுக்குத் துன்பம் வரும்போது எவ்வாறு உதவ வேண்டும்?

______________________________

______________________________

4. எண்ணங்களை வண்ணக்குழையல்களாக வெளிப்படுத்தும் கலை எது?

______________________________

______________________________

5. இசைக்கலைஞர்கள் அமரவேண்டிய இடங்கள் பற்றித் துல்லியமாகக் கூறும் நூல் எது?

______________________________

______________________________

6. மூத்தவன் இருக்க இளையவன் எப்படி அரசனாவது எனக் கேட்டவர் யார்?

______________________________

______________________________

7. ஆடற்கலை அந்நாளில் எப்பெயர்களால் அழைக்கப்பட்டது?

______________________________

______________________________

புள்ளிகள் 10

## 4) பாடல் வினாக்களுக்கு முழுவிடை தருக.

*மழை முகிலும் கூடுது*
*வண்ண மயிலும் ஆடுது*
*அழகுத் தோகை விரித்து நின்று*
*ஆனந்தமாய் ஆடுது*

*கோல மயிலின் கூத்தைக் கண்டு*
*குரங்கு தாளம் போடுது*
*கொப்புக் கொப்பாய்த் தாவிப் பாய்ந்து*
*குரங்கு தாளம் போடுது*

*வானம் பாடி மயிலின் கூத்தை*
*வாழ்த்திப் பாட்டுப் பாடுது*
*வண்ணக் கிளியும் வந்திருந்து*
*மயிலின் கூத்தைப் பார்க்குது*

*கொல்லும் வேடன் வில்லும் நழுவக்*
*கூத்தைப் பார்த்துக் களிக்கிறான்*
*குறத்தி மயிலின் கூத்தைக் கண்டு*
*குதித்து குதித்து நடிக்கிறாள்*

1. எதைக்கண்டு குரங்கு தாளம் போடுகிறது?

______________________________

______________________________

2. மயிலின் கூத்தை வாழ்த்திப் பாட்டுப் பாடுவது எது?

______________________________

______________________________

3. கூத்தைப் பார்த்துக் களிப்பவன் யார் எனக் கூறப்படுகிறது?

______________________________

______________________________

4. இங்கு வந்துள்ள பறவைகள் இரண்டின் பெயர்களைத் தருக?

______________________________

______________________________

5. மயிலின் கூத்தைக்கண்டு குதித்து குதித்து நடிப்பவள் யார்?

______________________________

______________________________

புள்ளிகள் 10

5) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

| | | |
|---|---|---|
| நாவுக்கு | மிளகு | நோய்களை |
| உணவு | ஆறாக | |

நாம் உண்ணும் ____________________ சுவைக்காக மட்டுமல்ல உடல்நலத்திற்கும் பயன்பட வேண்டும். தமிழர் சுவைகளை ____________________ வகுத்துள்ளனர். அதற்கு அறுசுவை எனப் பெயரிட்டனர். அறுசுவை உணவுகள் உடல்நலத்திற்கு ஏற்றதாகவும் ____________________ச் சுவையானதாகவும் அமைந்துள்ளன. நாம் உணவில் பலசரக்குகளைப் பயன்படுத்துகின்றோம். இஞ்சி, உள்ளி, மல்லி, சீரகம், வெந்தயம், ____________________ போன்றவை பலசரக்குகளாகும். இன்று உலகமக்கள் அனைவரும் தங்கள் உணவில் பலசரக்குகளை அதிகம் சேர்த்துக் கொள்கின்றனர். இவை ____________________க் குணப்படுத்தும் வல்லமை கொண்டவையென மருத்துவ அறிவியலாளர்கள் கூறுகின்றனர்.

புள்ளிகள் 10

**6) பந்தியை வாசித்து ; வினாக்களுக்கு முழுவிடை தருக.**

இனியன் திருகோணமலையிலுள்ள பள்ளியில் கல்வி கற்கின்றான். அவனுடைய நண்பன் குமரன். இருவரும் ஒரே வகுப்பில் படிக்கின்றனர். இனியனின் பெற்றோர் கந்தளாயில் வாழ்கின்றனர். விடுமுறைக்கு இனியன் தன் நண்பனுடன் கந்தளாய்க்குச் சென்றான். அங்கு இனியனும் குமரனும் பச்சைப்பசேல் எனக் காட்சியளித்த வயல்களையும் கரும்புத் தோட்டத்தையும் கண்டு மகிழ்ந்தனர். இவ்வயல்களுக்குத் தேவையான நீர் எங்கிருந்து பெறப்படுகின்றது என குமரன் இனியனிடம் கேட்டான். அதற்கு இனியனின் அப்பா கந்தளாய்க்குளத்திலிருந்து நீர் பெறப்படுகின்றது என்றும் இக்குளத்தைக் கட்டியவன் குளக்கோட்டன் என்றும் கூறினார்.

1. இனியன் எங்கே உள்ள பள்ளியில் கல்வி கற்கின்றான்?

_______________________________________________

2. இனியன் யாருடன் கந்தளாய்க்குச் சென்றான்?

_______________________________________________

3. இனியனும் குமரனும் எவற்றைக் கண்டு மகிழ்ந்தனர்?

_______________________________________________

_______________________________________________

4. வயல்களுக்குத் தேவையான நீர் எதிலிருந்து பெறப்படுகின்றது?

_______________________________________________

_______________________________________________

5. கந்தளாய்க்குளத்தைக் கட்டியவன் யார்?

_______________________________________________

புள்ளிகள் 10

7) **பந்தியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

**சேந்தன் அம்மாவுடன் கடைக்குச் சென்றான். அங்கே ஒரு பந்து வாங்கினான். அவன் வீட்டிற்கு வந்தான். தான் வாங்கிய பந்துடன் விளையாட்டுத்திடலுக்குச் சென்றான். அங்கே அவனது நண்பர்களைக் கண்டான். அவர்களுடன் சேர்ந்து மகிழ்ச்சியாகப் பந்தடித்து விளையாடினான்.**

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

புள்ளிகள் 05

8) **தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 60 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

★ இளங்கோ அடிகள்

★ நானிலத்தில் முல்லை என்ற பாடத்தில் நீர் கற்றவற்றை எழுதுக.

★ தமிழ்மொழி

புள்ளிகள் 15